**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 16/2022** **P.W. 2**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha,Assistant of this court on 12.08.2026 in accordance with the provision of the Act 1873.

| | |
|---|---|
| Name: | செல்லதுரை |
| Father Name : | பழனியாண்டி |

**9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் லோகாம்பாள் தாக்கல் செய்துள்ளார். வாதி என்ன சர்வே எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் ஏரி மீது தடம் போடக்கூடாது என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி யார் யார்மீது வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அன்பழகன், சுப்பன் மற்றும் இருநபர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். வாதி அரசுக்கெதிராகவும் வழக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். PWD என்று சொன்னார். எனது பிரமாணப்பத்திரத்தில் உள்ள விவரங்கள் வாதி சொல்லி தயாரிக்கப்பட்டதில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல விவரங்கள் நான்சொல்லி தயாரிக்கப்பட்டு கையெழுத்து செய்தேன். வழக்கு விவரங்களை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை லோகாம்பாள் சொல்லி தெரிந்துக்கொண்டேன். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் லோகாம்பாளின் கணவரான சுப்ரமணிக்கு பாத்தியப்பட்டது.

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் தற்போது கொண்டம்பட்டிமேடு, கதவு எண்.6/113-2 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் மேற்படி ஊரில்தான் வசித்து வருகிறேன் என்பதை நிரூபணம் செய்வதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கும், 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் உள்ளது என்றால் சரியல்ல. வாதி தனது பிராதில் தனக்கும், 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருப்பதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது பிரமாணப்பத்திரத்தில் ஏரியில் தடம் போட முயற்சித்தார்கள் என்று சொல்லியுள்ள நிலையில் யார் எந்த தேதியில் தடம் போட

முயற்சி செய்தார்கள் என்றால் தேதி தெரியாது ஆனால் 1 முதல் 7 பிரதிவாதிகள் தடம் போட முயற்சித்தார்கள். மேற்படி ஏரியில் தடம் போடுவதற்கான எவ்வித உத்தரவு அரசாங்க தரப்பில் போடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஏரி வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் பொதுப்பணித்துறைக்கும் இவ்வழக்கு ஏரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான் ஆனால் அதிலுள்ள வாய்க்கால் பொதுப்பணித்துறை சொந்தமானது. வாதி தனது பிராதில் 9 முதல் 11 பிரதிவாதிகளை அவசியத் தரப்பினர் அடிப்படையில் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வாதி சொன்னதன் பேரில் தெரியும். 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித வழக்கு மூலமும் ஏற்படவில்லை என்று வாதி தனது பிராதில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், எனது பிரமாணப்பத்திரத்தில் அனைத்து பிரதிவாதிகளும் பாதை அமைக்க முயற்சி செய்தார்கள் என்று பொய்யாக சொல்லி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**Sd/-E.Ridhula**
**DM,SDM.**

**Sd/-Selladurai(PW2)**